Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

நூலகம் ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 30 [12-04-1993] திங்கட்கிழமை ஓசை 53

## கல்வியியல் டிப்ளோமாவிற்கு அறிவித்த சம்பளம் இல்லை

கல்வியியல் கல்லூரிகளில் டிப்புளோமா பெற்று ஆசிரியர் சேவையில் சேர்ந்தவர்களுக்கு அரச வர்த்தமானியில் அறிவித்திருந்தபடி சம்பளம் தரப்படுவதில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது. கல்வியியல் கல்லூரிகளில் டிப்புளோமா பெற்றவர்களுக்கு 2150 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும் என்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவர்களுக்கு இப்போது 1950 ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்ப்படுகிறது. மூன்று வருடங்கள் கற்று டிப்புளோ பெற்ற தமக்கு 1950 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும். அதேவேளை தொழில நுட்பக்கல்லூரி [4 ஆம் பக்கம் பார்க்க]

# இடைக்காட்டு மோதலில் 5 இராணுவத்தினர் பலி

(லண்டன்)

பலாலி இராணுவ முகாமின் கிழக்குப்பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதலில் ஐந்து இராணுவத்தினர் பலியாகியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் இடைக்காட்டுப் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண்களிலிருந்து ஆறு கவச வாகனங்கள் சகிதம் கிழக்கு நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு அவர்களை திருப்பிஅனுப்பியதுதெரிந்ததே

இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள சிறிலங்கா கூட்டுப் படை தலைமையலுவலகம், பலாலி இராணுவ முகாமின் கிழக்கு எல்லையை விஸ்தரிப்பதை நோக்கமாகக் கொண்டு சூறாவளித் தாக்குதலை மேற்கொண்டதாகவும் இத்தாக்குதலின்போது படையினர் பலத்த எதிர்த்தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் கவச வாகனம் ஒன்றை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதாகவும் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது விமானப்படை விமானங்களும் உலங்குவானூர்திகளும் கடும் தாக்குதலை நடாத்தியதோடு பலத்த எறிகனை வீச்சும் மேற்கொள்ளப்பட்டமை தெரிந்ததே.

# 55 ஆயிரம் டாலர் ஆயுதம் கனடாவுக்குள் கடத்தல்

### தமிழ் இளைஞர்கள் தேடப்படுகின்றனர்

[கொழும்பு]

அமெரிக்காவிலிருந்து 55 ஆயிரம் அமெரிக்க டாலர் பெறுமதியான ஆயுதங்களை ரொரன்ரோவைச் சேர்ந்த தமிழ் இளைஞர் கோஷ்டி ஒன்று கடந்த வாரம் கனடாவினுள் கடத்தி வந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதையடுத்து கனேடியப் பொலிசார் இவ்வாயுதங்களைதேடி பாரிய தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன் ரொரன்ரோவில் ஸ்கபரோ நகரில் இரு தமிழ் கோஷ்டிகள் பெரும் மோதலில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே அமெரிக்காவிலிருந்து ஆயுதங்கள் கடத்தி வரப்பட்டிருப்பதாக கனேடிய செய்திகள் தெரிவித்துள்ளன.

'கனடாவினுள் சட்ட விரோதமாக வந்த ஆயுதங்கள் எவை என எமக்கு தெரியும். எனவே சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதில் பெரும் சிக்கல் ஏதும் இருக்கமாட்டாது' என கனேடிய பொலிஸ் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# புலிகளுக்கு ஆயுதங்கள் கப்பலில் வருகின்றதாம

### ரோந்து நடவடிக்கை தீவிரமாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்காக பெருந்தொகை ஆயுதங்களையும், ரவைகளையும் ஏற்றிக் கொண்டுள்ள கப்பல் ஒன்று சிறிலங்காவை நோக்கி வந்து கொண்டிருப்பதாக கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு கடந்த திங்களன்று தகவல் கிடைத்துள்ளதாம்.

இதையடுத்து சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் பணிகள் கடலில் அதிகமாக்கப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகையில், கடந்த திங்களன்று இரவு ஹை-எஸ் வான் ஒன்றை மேற்தளத்தில் ஏற்றிய படி கப்பல் ஒன்று கடலில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இக் கப்பலின் வானொலி மொழி பயன்படுத்தப்படுவது அவதானிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளன.

இக் கப்பலின் வேகத்தைக் கொண்டு மதிப்பிடுகையில் ஏப்பிரல் 12க்கும் 14க்கும் இடையில் இலங்கையின் கடல் எல்லைக்குள் வரக் கூடிய சாத்தியப்பாடு இருப்பதாகவும் இதையடுத்து வடக்கு- கிழக்கு கரையோரமெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா படையினர் விடுத்த வானொலிச் சமிக்கை எதனையும் இக் கப்பல் கண்டுகொள்ளவில்லையென்றும் மேலும் தெரியவருகிறது.

### கிளாலியில் கைதானோர் பலாலியில் இல்லை

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட எவரும் பலாலி இராணுவ முகாமில் இல்லை என தெரியவருகின்றது.

பலாலியில் கிளாலி கடல் நீரேரியில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக இன்னும் தெளிவான விபரமேதும் (4ஆம் பக்கம் பார்க்க)

### பதில் அதிபர்கள் நிரந்தர நியமனம்

பதில் அதிபர்களாகவும், வும், பதில் உதவிக் கல்விப்

### ஹெலி நோட்டம்

நேற்றுக் காலை 10-50மணியிலிருந்து சுமார் 15 நிமிட நேரமாக யாழ். நகரப் பகுதியையும், யாழ். நகரை அண்டிய கரையோரப் பகுதிகளையும் உலங்குவானூர்தி ஒன்று பலதடவை வட்டமிட்டு சென்றது.

இதனால் புதுவருடப் பிறப்புக்கான பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டிருந்த மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்

### கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட வருவாய்த்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### வீரச்சாவு

2-ம் லெப். கபில்

தொண்டமனாறு பகுதியில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம் பெற்ற நேரடிமோதலில் 2-ம் லெப்டினன்ட் கபில் (சின்ன

# பரப்புக்கடந்தானில் புக்காரா தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் பரப்புக் கடந்தானில் நேற்று சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான புக்காரா விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீசித் தாக்கின. இத் தாக்குதல்நேற்றுகாலை 10-30 மணியளவில் மேற்கொள்ளப் பட்டது.

இத்தாக்குதலின் போது மூன்று குண்டுகள் அடுத்தடுத்து வீசப்பட்டன. சேதவிபரம் தெரியவரவில்லை.

### துப்பாக்கிசூடு

### குடாக்கடலில் மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா படையினர் அரியாலை தெற்குப் பகுதியில் மீன்பிடிக் ... ந்தனர். சேதவிபரங்கள் தெரியவில்லை.

கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் இக் குடாக்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்காக பெருந்தொகை ஆயுதங்களையும், ரவைகளையும் ஏற்றிக் கொண்டுள்ள கப்பல் ஒன்று சிறிலங்காவை நோக்கி வந்து கொண்டிருப்பதாக கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு கடந்த திங்களன்று தகவல் கிடைத்துள்ளதாம்.

இதையடுத்து சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் பணிகள் கடலில் அதிகமாக்கப் பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகையில், கடந்த திங்களன்று இரவு ஹைஹ-எஸ் வான் ஒன்றை மேற்தளத்தில் ஏற்றியபடி கப்பல் ஒன்று கடலில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இக் கப்பலின் வானொலி அலைவரிசைகளில் தமிழ் மொழி பயன்படுத்தப்படுவது அவதானிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளன.

இக் கப்பலின் வேகத்தைக் கொண்டு மதிப்பிடுகையில் ஏப்பிரல் 12க்கும் 14க்கும் இடையில் இலங்கையின் கடல் எல்லைக்குள் வரக் கூடிய சாத்தியப்பாடு இருப்பதாகவும்

இதையடுத்து வடக்கு- கிழக்கு கரையோரமெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா படையினர் விடுத்த வானொலிச் சமிக்கை எதனையும் இக் கப்பல் கண்டுகொள்ளவில்லையென்றும் மேலும் தெரியவருகிறது.

## கிளாலியில் கைதானோர் பலாலியில் இல்லை

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட எவரும் பலாலி இராணுவ முகாமில் இல்லை என தெரியவருகின்றது.

பலாலியில் கிளாலி கடல் நீரேரியில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக இன்னும் தெளிவான விபரமேதும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதில் அதிபர்கள் நிரந்தர நியமனம்

பதில் அதிபர்களாகவும், பதில் விரிவுரையாளர்களாகவும், பதில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றுவோர் அப்பதவியில் நிரந்தரமாக நியமனம் பெற உள்ளனர். 26-6-90 க்கும் அதற்கு முன்னைய திகதியிலிருந்தும் பதில் கடமை புரிவோரே இவ்வாறு நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி இராஜாங்க அமைச்சிடம் சமர்ப்பித்த மகஜரை

(4ஆம் பக்கம் பார்க்க)

தொலைக்கல்வி நிலையங்களின்

## போதனாசிரியர்களை வாரம்முழுவதும் விடுவிக்குக

தொலைக்கல்வி நிலையங்களில் சிரேஷ்ட போதனாசிரியர்களாக மூன்று நாட்களுக்கு மட்டும் பாடசாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு கடமையாற்றுபவர்களை வாரத்திலுள்ள ஐந்து நாட்களுக்கும் விடுவிக்குமாறு வடகிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. மா. தியாகராசா சகல கோட்டங்களுக்கும், பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், வகிமா/மாகதி/ எஸ் ஓ / பி /84 இலக்க கடிதப்படி பணிப்புரை அனுப்பியுள்ளார்.

மகரகம தேசிய தொலைக் கல்வி நிறுவனம் இவர்களுக்கு வழங்கப்பட்ட மூன்று நாள் விடுவிப்பு இவர்கள் தமது பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய போதாமலுள்ளதாக தமக்கு தெரிவித்துள்ளதாகவும் இவர் மேலும் இதில் குறிப்பிட்டுள்ளார். [17]

## வகுப்புவாத அரசியலை முடிவுக்குக் கொண்டு வருக!

### "சார்க்" தலைவர்களிடம் கோரிக்கை

(டாக்கா)

வகுப்புவாத அடிப்படையிலான அரசியலை தத்தம் நாடுகளில் முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சார்க் அமைப்பின் தலைவர்களைக் கோரும் பிரகடனம் ஒன்றை பங்களாதேஷ் தலைநகரில் கூடிய எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுத்துள்ளனர்.

அப்பிரகடனத்தில் மேலும், இத்தகைய அரசியல் போக்குகள் மனித உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதோடு, பிராந்தியத்தில் அமைதியற்ற நிலையையும் பதற்றத்தையும் தோற்றுவிக்கவும் ஏதுவாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளாலி - பூநகரி

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட வருவாய்த்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வீரச்சாவு

### 2-ம் லெப். கபில்

தொண்டமனாறு பகுதியில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம் பெற்ற நேரடிமோதலில் 2-ம் லெப்டினன்ட் கபில் (சின்னராஜா தேவராஜன், திருக்கோணமலை, குச்சவெளி தற்போதைய முகவரி: மடுக்கோவில், மன்னார்] என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மேற்கொண்டு அவர்களை திருப்பிஅனுப்பியதுதெரிந்ததே

த்த எதிர்த்தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் கவச

மேற்கொள்ளப்பட்டமை தெரிந்ததே.

# பரப்புக்கடந்தானில் புக்காரா தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் பரப்புக் கடந்தானில் நேற்று சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான புக்காரா விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீசித் தாக்கின. இத் தாக்குதல்நேற்றுகாலை 10-30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது மூன்று குண்டுகள் அடுத்தடுத்து வீசப்பட்டன. சேதவிபரம் தெரியவரவில்லை.

## துப்பாக்கிசூடு ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் அம்பனைப் பகுதியில் அமைத்துள்ள காவலரண்களில் இருந்து நேற்று நண்பகல் வேளை குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாக்கடலில் மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா படையினர் அரியாலை தெற்குப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி நேற்றுக் காலை 5.30 மணியிலிருந்து 6. 30 மணிவரை இடையிடையே துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர். இதனால் மீனவர்கள் தமது தொழில்களை இடைநடுவில் விட்டுவிட்டு கரைசேர்ந்தனர். சேதவிபரங்கள் தெரியவில்லை.

கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் இக் குடாக் கடல் கரையோரங்களை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களைத் தீர்ப்பதும் காலை, மாலை நேரங்களில் கடற்பிராந்தியங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் மீது கல்முனை, மண்டைதீவுப் பகுதியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் நடைபெற்று வருவதால் இப்பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கிவேட்டு

(தென்மராட்சி)

இயக்கச்சிப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3-30 மணியளவில் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். பல நிமிட நேரமாக இத் துப்பாக்கி வேட்டுகள் கேட்டவண்ணம் இருந்தன. (86)

# அம்புலன்ஸ் மீது தாக்குதல்; ஒப்பந்தம் மீறிய செயல்

## இலங். செஞ்சிலுவை அதிகாரி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் இன்னல்பட்ட மக்களுக்கு உடனடிஉதவிபுரிய சென்றுகொண்டிருந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வாகனம் மீதான சிறிலங்கா விமானப்படையினரின் தாக்குதலானது செஞ்சிலுவை ஜெனீவா ஒப்பந்தங்களை மீறும் செயல் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் நேற்று புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்கா வான்படையினரின் இத் தாக்குதலானது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. சிறிலங்கா வான்படையினர் இலங்கை செஞ்சிலுவைச்சங்க அம்புலன்ஸ் எனத் தெரிந்தும் அதன்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றார்.

தாக்குதல் நடாத்தப்பட்ட போது, அம்புலன்ஸ் வாகன பின்பகுதி திறக்கப்பட்டு இலக்கத்தகடு மேலே தெரிந்து கொண்டிருந்தது. செஞ்சிலுவைக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. வாகனம் நிறுத்தப்பட்டு தொண்டர்கள் சீருடைகளுடன் வெளியே நின்று கொண்டிருந்தனர். இவற்றை எல்லாம் அவதானித்த பின்னரே விமானப்படை அம்புலன்ஸ்மீது தாக்குதல் நடாத்தியது. சிறிலங்கா விமானப் படையின் இத்தகைய செயலை அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அமைப்புகளும் கண்டிக்க வேண்டும் என அவ் அதிகாரி கேட்டுள்ளார்.

## அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கதிரவெளி, அம்மந்தனவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஐநூறுக்கும் அதிகமான பொதுமக்கள் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக நேற்றுமுன்தினம் ஒருநாள் அடையாள

(4ஆம் பக்கம் பார்க்க)

# வீரப்பன் கைதாக உதவின் 40 லட்சம் ரூபா சன்மானம்

## தமிழக, கர்நாடக அரசுகள் அறிவிப்பு

(சென்னை)

சந்தன மரக் கடத்தல் காரன் வீரப்பன் மற்றும் அவரது சகோதரன் என்போரைக் கைது செய்ய உதவும் தகவல் அளிக்க முன்வருவோருக்கு கர்நாடக மாநில அரசும் தமிழக மாநில அரசும் தலா இருபது இலட்சம் ரூபா சன்மானம் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

சென்னையில் நேற்று கர்நாடக முதல்வர் வீரப்பமொய்லியும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் சந்தித்து இக் கூட்டத்தினரைக் கைது செய்வதற்காக விசேட உத்திகள் மற்றும் புதிய தந்திரோபாயங்கள் வகுப்பது பற்றியும் ஆராய்ந்து உள்ளனர்.

அத்துடன் வீரப்பனின் கூட்டத்தைசேர்ந்தவர் எனப்படும் ஒருவரை கைது செய்ய இரு மாநில அரசுகளும் தலா பத்து லட்சம் ரூபா வழங்கவும் தீர்மானித்துள்ளன.

இருமாநில பொலிசாரும் இது விடயத்தில் மேலும் நெருக்கமாக ஒத்துழைப்பது என்றும், இக் கூட்டத்தினரைப் பிடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும், புதிய யுக்திகளை இரு மாநிலங்களும் வகுப்பது என்றும் இந்த ஆலோசனையின் போது முடிவுசெய்யப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் இரு மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாபெரும் விருட்சமாக போராட்டம் வளர்ந்துள்ளது

## -கரிகாலன்

(பருத்தித்துறை)

இரண்டு தசாப்தங்களை கடந்து இந்த விடுதலைப் போராட்டம் மாபெரும் விருட்சமா வளர்ந்து கொண்டுள்ளது உலகளாவிய ரீதியில் தமிழீழ விடுதைலைப் போராட்டம் ஒரு வளர்ச்சி அடைந்த இயக்கமாக வளர்ந்து உள்ளது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவின் துணைப்பொறுப்பாளர் கரிகாலன் பருத்தித்துறை தும்பளையில் இடம்பெற்ற அன்னை பூபதி நினைவுநிகழ்வு மற்றும் மார்ச் ஏப்பிரல்மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட திருமலை மாவட்ட மாவீரர்களின் வீரவணக்க கூட்டம். ஆகியவற்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

வடமாரட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் பைந்தமிழன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மூத்த உறுப்பினர் தேவர், பெண்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### உங்களை அழைக்கின்றது

யோ.எகட்டனின் ஜெசித் தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமுன் ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி 6357)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### 1993–94 ஸ்ரீமுக புதுவருஷ பலன்கள்

புதுவருஷப்பிறப்பு கர்மம் ஆரம்ப முகூர்த்த வேளை' கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம், செவ்வாய் மாற்றம் அடங்கியவை ரூ. 8 50 எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. நூலாசிரியர் சத்தியதாஸன்). (4663)

### செந்தமிழ்ப் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது நுழைவாயில் ரிக்கற்றுகளை யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.(4640)


### போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

தெகிவளை களுபாவில பகுதியில் இருக்கும் பிரதிமிம்பராமய வீதியில் இருக்கும் வீடொன்றிலிருந்து செயற்பட்டு வந்த போதைப்பொருள் கடத்தல் கோஷ்டி ஒன்றைக் கடந்த வியாழனன்றிரவு இரண்டு கோடி ரூபா பெறுமானமுடைய 10.4 கிலோ கிராம் போதைப் பொருளுடன் பொலிசார் கைது செய்துள்ளனர்.


### தேவை

நல்ல நிலையிலுள்ள 6' × 3' இரும்பு அலுமாரிகள் உடன் தேவை நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: சங்கிலியன் விறகுகாலை 639 பருத்தித்துறைவீதி,முத்திரைச்சந்தி நல்லூர். (4668)

### உடன் விற்பனைக்கு

பிறவுண் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (4665)


### நீலன் தலைமை

(கொழும்பு)

தென் ஆபிரிக்காவில் அரசியல் வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் அந்நாட்டு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் கைச்சாத்து இட்டு இருக்கும் உடன்பாட்டின் அமுலாக்கலை அவதானிக்கச் செல்லும் கண்காணிப்புக் குழுவிற்கு கலாநிதி நீலன் திருச்செல்வம் தலைமைதாங்குகின்றார். அரசியல் அமைப்பு சட்ட நிபுணரான கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் தலைமையிலான குழுவில் ஒன்பது பேர் அங்கம் வகிக்கின்றனர்.

### வர்த்தகர் கைது

(கொழும்பு)

இத்தாலியில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி பல இளைஞர்களிடமிருந்து சுமார் ஐம்பது லட்சம் ரூபாவை சுருட்டிக் கொண்ட கோடீஸ்வரரான வர்த்தகர் ஒருவரை நீர்கொழும்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

### அத்துமீறல்

(வவுனியா)

வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில்குடியிருப்புஎன்ற பகுதியில் உள்ள பயணிகள் விடுதியில் சிங்களவர்களுக்கென அத்துமீறி 10 கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### திறப்பு விழா

தமிழ்எழுத்தாளர் ஒன்றியத் தலைமைப்பீடத் திறப்புவிழா வரும் வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ் எழுத்தாளர் ஒன்றிய அமைப்பின் தலைமைச் செயலகம் ஆரியகுளம் சந்தி 107, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளது.


## உடன் விற்பனைக்குண்டு


## போர் செலவில் சிறிலங்கா ஆசியாவில் இரண்டாமிடம்

எம். பி. குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

ஆசிய உபகண்டத்தில் பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக அதிக அளவு பணத்தை பாதுகாப்புச் செலவீனமாக செலவு செய்யும் நாடு இலங்கை. வடக்கு கிழக்கு போருக்கு அரசு கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 22 ஆயிரம் கோடி ரூபாவை செலவிட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட எம். பி ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் ஆர்ஜென்டீனாவிடமிருந்து அரசு மூன்று விமானங்களை 75 கோடி ரூபாவிற்கு வாங்கியுள்ளது. இவற்றைக் கொண்டு போரரைத் தொடர்வதே அரசின் நோக்கம். இப்போரினால் தினமும் 40 பேர் பலியாகின்றனர். இப்போரினால் வடக்கு கிழக்கில் இதுவரை 60 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### லங்கா சீமெந்து கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கான கொடுப்பனவு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் கொமேர்சல் வங்கியில்வழங்கப்படவுள்ளது.

### தற்கொலை

குடும்ப தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை இரவு சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது சுன்னாகம் பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கையைச் சேர்ந்த நாகமணி சீவரத்தினராசா (வயது 32) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். [11]

### உண்ணாவிரதங்கள்

அன்னை பூபதி நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி சங்கானை வட்டவைப் பிரதேசத்தில் சங்கானை பஸ் நிலைய அருகிலும், சண்டிலிப்பாய் வட்டவைப் பிரிவில் அதே தினம் சுதுமலை அம்மன் ஆலயத்திலும் இடம்பெறும். [9]


தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி

## தற்காலிக வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(குறியீட்டு இல. 106 – 9)

சம்பள அளவுத்திட்டம் — $\frac{905 \quad - \quad 1605}{40 \times 5 \quad - \quad 50 \times 10}$

அத்துடன் கூ.வே. ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவச் சான்றிதழ்கள், வதிவிடச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''பொதுமுகாமையாளர் தென்மராட்சி மேற்கு ப.நோ. கூ. சங்கம் கைதடி'' என்ற விலாசத்திற்கு 30-04-93க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப் படுத்தவும்.

**குறிப்பு:**

விண்ணப்பத்தின் கடித உறையின் இடது பக்கத்தில் ''தற்காலிக வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என எழுதப்படல் வேண்டும்.

**கல்வித் தகைமை:**

1. கூட்டுறவுப் பணியாளர் 10-வது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11-வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் / க. பொ. த. உயர்தரம் மூன்று பாடங்களில் சித்தியுடன்,சந்தைப்படுத்தல் / வழங்கல் / பொருள் விநியோகம் பொருள்களின் இறக்குமதி / ஏற்றுமதி என்ற துறையில் வர்த்தக / தொழிற்றுறை ஸ்தாபனம் ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது: 23—40 வருடம் (சங்க ஊழியர்களுக்கு வயது எல்லை கணிக்கப்பட மாட்டாது)

நிபந்தனைகள்: அ) விண்ணப்பகாரர் இரண்டு வருடங்களுக்குமேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆ) ஆங்கிலம், சிங்களம் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

பிணைப்பணம்: ரொக்கம் ரூபா 5000/- ஆதனப்பிணை ரூபா 25000/- செலுத்தல் வேண்டும்.

குறிப்பு:- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்காலிக சமயோசித அடிப்படையில் மட்டுமே நியமிக்கப்படுவர்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம். பொதுமுகாமையாளர்.


## அதிகாரிகளின் கூற்றை தாக்குதல் பொய்ப்பித்தது

[கொழும்பு]

மணலாறில் கடந்தவெள்ளி நடைபெற்ற அதிரடித் தாக்குதல் தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளன.

சென்ற ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதியும் இதே இடத்தில் புலிகள் தாக்குதல் நடத்தியதில் 40க்குமேற்பட்ட இராணுவத்தினர் இறந்ததாகவும், அன்றைய தினம் 20 இராணுவத்தினர் உயிரிழந்ததைத் தொடர்ந்து இப்பகுதியில் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக நடமாடுவதையே எடுத்துக் காட்டுவதாக இராணுவ வட்டாரம் தெரிவிக்கின்றது.

இதேவேளை ஏ.எவ்.பி.நிறுவனம் இந்த ஆண்டில் இதுவரை காலத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரிய தாக்குதல் இதுவென்றும், விடுதலைப் புலிகள் வடக்கு- கிழக்கில் பாரிய தாக்குதல் நடத்த முடியாத நிலையில் இருப்பதாக இராணுவ உயர் அதிகாரிகள் கூறிவருவதை இத்தாக்குதல் பொய்யாக்கி இருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது.

## தமிழ்க்குழுவிடம் ஆயுதம்; அரசியல்கட்சிகள் கண்டனம்

நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலின் போது ஈ.பி.டி.பியிடம் ஆயுதம் இருப்பதை பல அரசியல் கட்சிகள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

கடந்த மாகாணசபை தேர்தலின் போது வழங்கப்பட்ட 3000க்கு மேற்பட்ட ஆயுதம் இன்றும் மீளப்பெறாமல் இருப்பதாகவும கொழும்பு ஈ.பி டி பி.தலைமை அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு நவீனரக ஆயுதங்களை வழங்கியது தொடர்பாக மாகாணசபையில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு பலத்த அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாகாணசபை தேர்தலில் போட்டியிடும்அபேட்சகரின் கொம்பனி தெரு வீடு உடைக்கப்பட்டதிற்கும் ஈ. பி. டி. பிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக பலகட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன

## வீட்டை கொத்தி சேதப்படுத்திய குடும்பஸ்தர்

ஆத்திரத்தினால் குடியிருந்த வீட்டைக் கொத்தியுள்ளார் குடும்பஸ்தர் ஒருவர். நாவற்குழி லவனிதா குடியிருப்பில் வசித்துவந்த மேற்படி குடும்பஸ்தர் குடியிருந்த குடிசையினை விட்டு எழும்ப வேண்டி ஏற்பட்டதனால் அக் குடிசையினை மண்வெட்டியினால் தோட்டம் . கொத்தியதைப் போன்று கொத்தியுள்ளார்.

மெழுகி அழகாக காணப்பட்ட குடிசை நிலம் தற்போது எவருக்குமே பயன்படாத நிலையில் உள்ளது. அத்துடன் குடிசையின் ஒரு பகுதி எரிக்கப்பட்டும் உள்ளது. (22)


## ரேஷி பழப்பான

விற்பனையாளர்களுக்கு

உங்களுக்கு தேவையான

பழப்பானங்களை

பின்வரும் எமது முகவர்களிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சியில் .

சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி

தென்மராட்சியில்

அறிவகம், சாவகச்சேரி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD

14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6384)


## நினைவு கூருகின்றோம்...

1993-04-12

பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.(4640)

## போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

தெகிவளை களு பாவில பகுதியில் இருக்கும் பிரதிமிம்ப ராமய வீதியில் இருக்கும் வீடொன்றிலிருந்து செயற்பட்டு வந்த போதைப்பொருள் கடத்தல் கோஷ்டி ஒன்றைக் கடந்த வியாழனன்றிரவு இரண்டு கோடி ரூபா பெறுமானமுடைய 10.4 கிலோ கிராம் போதைப் பொருளுடன் பொலிசார் கைது செய்துள்ளனர்.

(வவுனியா)

வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில்குடியிருப்புளன்ற பகுதியில் உள்ள பயணிகள் விடுதியில் சிங்களவர்களுக்கென அத்துமீறி 10 கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## திறப்பு விழா

தமிழ்எழுத்தாளர் ஒன்றியத் தலைமைப்பீடத் திறப்புவிழா வரும் வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ் எழுத்தாளர் ஒன்றிய அமைப்பின் தலைமைச் செயலகம் ஆரியகுளம் சந்தி 107, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளது.

---

யிலான பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் / க. பொ. த. உயர்தரம் மூன்று பாடங்களில் சித்தியுடன், சந்தைப்படுத்தல் / வழங்கல் / பொருள் விநியோகம் பொருள்களின் இறக்குமதி / ஏற்றுமதி என்ற துறையில் வர்த்தக / தொழிற்றுறை ஸ்தாபனம் ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது: 23—40 வருடம் (சங்க ஊழியர்களுக்கு வயது எல்லை கணிக்கப்பட மாட்டாது)

நிபந்தனைகள்: அ) விண்ணப்பகாரர் இரண்டு வருடங்களுக்குமேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆ) ஆங்கிலம், சிங்களம் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

பிணைப்பணம்: ரொக்கம் ரூபா 5000/- ஆதனப்பிணை ரூபா 25000/- செலுத்தல் வேண்டும்.

குறிப்பு:- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்காலிக சமயோசித அடிப்படையில் மட்டுமே நியமிக்கப்படுவர்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம். — பொதுமுகாமையாளர்.

கைதடி. 10-04-1993

(சி/6395)

---

உங்களுக்கு தேவையான

பழப்பானங்களை

பின்வரும் எமது முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சியில்

சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி

தென்மராட்சியில்

அறிவகம், சாவகச்சேரி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6384)

---

## உடன் விற்பனைக்குண்டு

பிறவுண் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

**"மல்லிகாபதி"**

சந்தை கிழக்கு ஒழுங்கை.

மானிப்பாய். (4664)

---

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 3.30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம் :

| | | |
|---|---|---|
| மரக்கறி | – | 24.50 |
| மீன் | – | 28.50 |
| இறைச்சி | – | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-6367)

---

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)

---

## மருதடி விநாயகர் மகோற்சவத்தில்

# சுரபியின் பரிசுத் திட்டம்

★ இலாபத்தை ஈட்டுதல் நமது இலக்கல்ல .. இன்றைய காலத்தடையை உடைத்து எழுந்து நடப்பதே எமது இலக்கு.

உங்கள் உடலுக்கு உறுதியூட்டும் ஊட்டச்சத்துக்களை அள்ளி வழங்குகிறது சுரபி பழரசப்பானங்கள்.

மகோற்சவகாலத்தில் சுரபியின் பல்லாயிரக்கணக்கான "றெனோல்ட் பேனாக்கள்" உங்களுக்காக காத்திருக்கின்றன

பரிசுக்கு முந்துங்கள் — வெற்றியை ஏந்துங்கள்

பரிசினை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இது தான்:-

சிறிதும் சேதமில்லாத வெற்று ஜாம் போத்தல்கள். வெற்று 300 ml Fanta Coca Cola Pepsi - Cola Sprite Mirinda போத்தல்கள் பியர் மற்றும் கோடியல் போத்தல்களை கோவில் வீதியில் உள்ள விற்பனை நிலையத்தில் கொடுத்து ஒவ்வொரு போத்தலுக்கும் ஒவ்வொரு 'றெனோல்ட் பேனாவை" இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அத்துடன் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பேனா மூடிக்குள் எம்மால் அடையாளமிடப்பட்ட "லேபல்" காணப்பட்டால் மேலும் ஒரு பேனாவை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

குறிப்பு:-

சுரபியின் தயாரிப்புக்களான மா, தோடை, எலுமிச்சை, திராட்சை, நெல்லி ஆகியவற்றிலிருந்து தயாராகும் மென்பானங்கள், கோடியல், ஜாம், தக்காளி சோஸ், ஊறுகாய், மோர்மிளகாய், அப்பளம் மற்றும் கம்பு மா, குரக்கன் மா, உழுந்துமா ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகளை எம்மால் கோவில் வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுரபி பழரசத் தொழிற்சாலை,**

கோப்பாய்.

[சி-6342]

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-12

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கோபு தேவின் (க. தர்மராசா-நாவற்குழி-மட்டு)

1989 ஆம் ஆண்டு கரந்தனில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியபோது வீரச்சாவெய்திய,

கண்ணன்/ஜெமினி (சுப்பிரமணியம் திருநாவுக்கரசு எஸ். ஜே. வி. செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு யாழ்)

யாழ்-கச்சாயில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

லெப்.ஜெனா (சந்துருகுலசிங்கம் சிவராசா-வரணி வடக்கு, கொடிகாமம்-யாழ்)

வவுனியா பூம்புகார் பகுதியில் இந்தியப்படையினரின் வாகனத் தொடரை வழிமறித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

கப்டன் சண்முகப் (முத்துக்குமாரு சண்முகராசா -கண்டிறோட், அரியாலை - யாழ்)

2-ம் லெப்.சின்னசுதா/அகிலன் (கதிர்காமநாதன் சுதர்கரன்-52/61, பபிகரன் வீதி, கொழும்புத்துறை-யாழ்)

இந்தியப்படை மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது தீவிர ஆதரவாளர்,

சபாபதிப்பிள்ளை கவிச்சந்திரன் (அரியாலை-யாழ்)

மீசாலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய அதிபர்.

1991 ஆம் ஆண்டு யாழ்-காரைநகர்ப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

லெப். உத்தவா [தங்கவடிவேல் சந்திரகுமார்-உதயசூரியன் புது வீதி, மதவடி-வல்வெட்டித்துறை)

சிவம்/சிவா (முத்தையா சாந்தகுமார் வத்திராயன் வடக்கு-தாளையடி-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6393)

### சிந்தனைக்கு

தனக்கு ஒரு முகம் காட்டி, ஊராருக்கு இன்னொரு முகம் காட்டுபவன், நாளடைவில் தன் உண்மையான முகம் எது என்று அறியாமல் திணறுவான். — நந்தேனியல் ஹார்த்தார்ன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சிறிலங்கா புரிவது இனப்படுகொலையே

சிங்கள அரசு புரிவது புலிகளுக்கு எதிரான போரல்ல, ஓர் இனப்படுகொலையே என்பதை அச்சுவேலிப் பகுதியிலும், வடமராட்சியிலும், சிறிலங்கா விமானப்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலுக்கு நால்வர் பலியாகியுள்ளமை மீண்டும் வெளிக்காட்டுவதாகவுள்ளது. இதிலும் குறிப்பாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் உபதலைவர் புவனேந்திரன் கொல்லப்பட்டமை, சிறிலங்கா அரசாங்கம் புரிவது இனப்படுகொலைதான் என்பதை எவரும் மறுக்க முடியாதவாறு நிருபணம் செய்துள்ளது.

திரு புவனேந்திரன் கொல்லப்பட்ட சம்பவமானது தவறுதலாகவோ அன்றி புரியாமலோ மேற்கொள்ளப்பட்டதல்ல. ஏனெனில் வாகனம் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உரியதென்பதைத் தெளிவாகக் காட்டுமளவிற்கு செஞ்சிலுவைக்கொடி வாகனத்தில் பறந்து கொண்டிருந்தது. மற்றும் வாகனத்தில் சென்றவர்களும் செஞ்சிலுவைச் சீருடை அணிந்திருந்தனர்.

இதேவேளை, சிங்கள அரசாங்கம் அம்புலன்ஸ் வாகனம்மீதோ, அன்றி ஆஸ்பத்திரி மீதோ மேற்கொண்ட முதலாவது தாக்குதல் அல்ல இது. இதற்கு முன்னரும், இதே வல்லைவெளிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை உலங்கு வானூர்திகள் 'அம்புலன்ஸ்' வாகனம்மீது தாக்குதல் நடத்தி உள்ளன. இதனால், நோயாளி உட்பட பலர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

இவை இன அழிப்பு என்ற நோக்கிலேயே செய்யப்பட்டன. வேறு எந்த விடயத்திலும் சிறிலங்கா அரசாங்கம் உலக நாடுகளுக்கு விட்டுக்கொடுப்புக்கள் செய்தாலும் இன அழிப்பு விடயத்தில் சிங்கள அரசாங்கம் விட்டுக்கொடுப்புக்கள் செய்யத்தயாராக இல்லை என்பதையே இது காட்டுகின்றது. இதனை உலகம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

தற்பொழுது சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகள் மீறப்படாமல், எவ்வாறு போரை நடத்துவதென்பது குறித்து ஆராய்வதாக வெளிவரும் செய்திகள் வேடிக்கையானவையாகவுள்ளன. எவ்வாறான வழியைக் கடைப்பிடித்தாகிலும் போரை வென்றால் போதும் என்ற ரீதியில் பெருமளவில் போர் தளபாடங்களையும், அழிவு புரியும் ஆயுதங்களையும் வாங்கிக் குவித்துள்ள சிறிலங்கா [illegible]

# கொழும்பு விமான நிலையம் பொலிஸாரால் சோதனை

## குண்டு இருப்பதாக புரளி

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. விமானநிலையத்திற்கு செல்லும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்த விமான நிலையத்தில் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்தே அங்கு சில தினங்களாக கடும் சோதனைகள் இடம்பெறுகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் வரவழைக்கப்பட்டு விமான நிலைய கட்டடங்கள், சுற்றாடல் என்பன கடுமையாக சோதிக்கப்பட்டு வருகின்றன.

குண்டு தகவல் உண்மையில்லை என்று கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் உஷார் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக நீர்கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன

## போராட்டம் நடத்திய மாணவர் மீது தாக்குதல்

(கொழும்பு)

களுத்துறை பஸ் நிலையத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலிசார் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது இதனால் பலர் காயமடைந்துள்ளனர்.

ஆயுர்வேத மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக மறியலில் ஈடுபட்டிருந்த இவர்கள் மீது பொலிசார் மூர்க்கத்தனமான குண்டாந்தடி, மற்றும் ''பெல்ட்'' பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை சர்வ மாணவர்சம்மேளனம் வன்மையாக கண்டித்துள்ளது. இந்த நடவடிக்கை தொடருமாயின் மாணவர்கள் தமது உரிமைகளை பெறுவதற்கு வேறு வழிகளைநாடவேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள் என அவ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தென்பகுதிபாடசாலைகளில் பாலியல் கல்வி ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்காவில் நான்கு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் பாலியல் கல்விப் போதனை இவ் வாரம் முதல் ஆரம்பமாகியுள்ளது. மாத்தறை, கேகாலை, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களில் ஆசிரியர்கள் இக் கற்கை நெறியைக் கற்பிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டுச் சபையின் ஆதரவுடன் இத்திட்டம் பாடசாலைகளில் மேற் கொள்ளப்படுகிறது. ஏற்கனவே காலி, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு மாவட்டங்களில் பாலியல் கல்வி பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டது.

எயிட்ஸ் வியாதி தீவிரமாகப் பரவுவதால் பாலியல் கல்வி அறிவு மாணவர்களுக்கு முக்கியம் என்றும், பாடத்திட்டத்தில் இன விருத்தி அறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் குடும்பக்கட்டுப்பாட்டுச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 12 வெற்றிடங்களுக்கு 1500 பேர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் தரம் மூன்று ஊழியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டபோது க. பொ. த. உயர் தரத்தில் விசேட சித்திபெற்றவர்களும், ஜி. ஏ. கியு. மற்றும் க பொ. த. சாதாரண தரத்தில் விசேட அதிதிறமைச் சித்தி பெற்றவர்களும் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் மூன்றாந்தர ஊழியர்களுக்கான [illegible] பினாலேயே க. பொ. த. உயர்தரம் வரை கற்ற திறமைசாலிகளும் இதற்கு விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆகக்குறைந்தது பன்னிரண்டு பேரை வேலைக்கு அமர்த்தும் திட்டத்தில் ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களை [illegible]

## காக்க முயற்சித்தாராம்

[கொழும்பு]

வரதன் சயனைட் விழுங்கிய பின்னர் அவரின் உயிரைக் காப்பாற்ற தான் முழுமுயற்சி எடுத்ததாக குற்றத்தடுப்பு தலைமை அலுவலக பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. ஜி தேவசுரேந்திரா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபேசேகர முன்னிலையில் நடைபெற்ற கொழும்பு கூட்டுப்படைகள் தலைமை அலுவலக [ஜே. ஓ. சி] குண்டு வெடிப்பு வழக்கு விசாரணையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். [நி]

## சம்பியன்கள் தெரிவு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான, கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், எல்லே விளையாட்டு ஆகியவற்றின் சுற்றுப்போட்டிகள் முடிவடைந்து சம்பியன்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கரபந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் நாகர்கோவில் தெற்கு வெண்மதி விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில், தாழையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டன.

கூடைப்பந்தாட்டப் போட்டியில், தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், எல்லே விளையாட்டுப் போட்டியில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் சம்பியன்க [illegible]

## மனித காவியம் ஆனவள்!

அன்னை பூபதி அன்னை பூபதி
அழகாய் ஒளிரும் மாமதி!
இன்னல் அகன்று இம்மண் மீள
இன்னுயிர் ஈந்த பேரொளி!

புனித தாயகம் பெற்ற மாமகள்
புதையல் போல்மனம் நிறைந்தவள்
அனியாய இந்திய அரக்கர் படைகளை
அகற்ற வேள்வியில் எரிந்தவள்!

மட்டு மாநகர் மண்ணி லேஒரு
மனித காவியம் ஆனவள்!
பட்ட மரமெனச் செப்பும் முதுமையில்
பசுமை பூத்திடத் திகழ்ந்தவள்!

வீர விடுதலை உணர்வு பொங்கிட
வீறு கொண்டுபோர் தொடங்கினாள்!
பார தப்படை பாத கங்களைப்
பாருக் குணர்த்திய பைஞ்சுடர்.

—பொ. தயாளன்

## லொஸ்ஏன்ஜலிஸில் பொலிஸார் உஷார்

### ரொட்னிகிங் கொலை வழக்கு தீர்ப்பு விரைவில்

[லொஸ்ஏன்ஜலிஸ்]

கறுப்பினக் கார்ச் சாரதியான ரொட்னிகிங் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளிப்பது முடிவடைந்து விட்டது. லொஸ்ஏன்ஜலிஸில் ரொட்னிகிங்கை தாக்கி படுகொலை செய்ததாக நான்கு அமெரிக்க வெள்ளையினப் பொலிஸார் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

சாட்சியமளிப்பது முற்றுப் பெற்றுள்ள தால் எதிரிகள் மீதான தீர்ப்பை எதிர்பார்த்திருக்கும் கறுப்பின மக்கள் புதிதாக வன்முறையில் ஈடுபடலாம் என்ற அச்சம் இப்போது தலை தூக்கியுள்ளது.

கறுப்பினத்தவரான ரொட்னிகிங் பொலிஸாரால் அடித்துக் கொல்லப்பட்டது வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் நான்கு வெள்ளையின பொலிஸாரும் விசாரிக்கப்பட்டு கடந்தஆண்டு ஏப்ரல் 29-ம்திகதி வழங்கப்பட்ட தீர்ப்பு வெள்ளையினப் பொலிஸாருக்கு சார்பாக இருந்ததால் கறுப்பின மக்கள் பெரும் கலவரத்தில் இறங்கினர். இதனால் லொஸ்ஏன்ஜலிஸ் நகர் பெரும் சேதத்திற்குள்ளானது. கலவரத்தில் 53 பேர் பலியாகினர்.

இப்போது சாட்சியங்கள் முடிவுற்ற நிலையில் தீர்ப்பை எதிர்நோக்கியுள்ள கறுப்பின மக்கள் கலவரத்தில் இறங்கலாம் என்பதால் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

1991ஆம் ஆண்டு ரொட்னிகிங் என்ற இந்த கறுப்பின சாரதி குடிபோதையில் காரை வேகமாக ஓட்டிச் சென்றதாக வீதியில் லொஸ்ஏன்ஜலிஸ் பொலிஸார் நால்வரினால்வழி மறிக்கப்பட்டு காரிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார். இச்சம்பவத்தை அவ்வீதியில் வந்த மற்றுமொரு கார்ச்சாரதி வீடியோவில் படம்பிடித்து வெளியிட்டதையடுத்து அமெரிக்க கறுப்பினத்தவர்கள் மத்தியில் வெள்ளையரெதிர்ப்பு போக்கு தீவிரமானது தெரிந்ததே.

## காங்கிரஸ் வேட்பாளர் ராவ் தெரிவு செய்வார்

(சென்னை)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பழனி மக்களவை, ராணிப்பேட்டை சட்டப்பே [illegible] மு.க மற்றும் தி.மு.க தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமது கட்சிக்கு ஆதரவு நல்குமாறும் கேட்டுக் கொண்டார்.

யில் சிறிலங்கா விமானப்படை உலங்கு வானூர்திகள் 'அம்புலன்ஸ்' வாகனம்மீது தாக்குதல் நடத்தி உள்ளன. இதனால், நோயாளி உட்பட பலர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

இவை இன அழிப்பு என்ற நோக்கிலேயே செய்யப்பட்டன. வேறு எந்த விடயத்திலும் சிறிலங்கா அரசாங்கம் உலக நாடுகளுக்கு விட்டுக்கொடுப்புக்கள் செய்தாலும் இன அழிப்பு விடயத்தில் சிங்கள அரசாங்கம் விட்டுக்கொடுப்புக்கள் செய்யத்தயாராக இல்லை என்பதையே இது காட்டுகின்றது. இதனை உலகம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

தற்பொழுது சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகள் மீறப்படாமல், எவ்வாறு போரை நடத்துவதென்பது குறித்து ஆராய்வதாக வெளிவரும் செய்திகள் வேடிக்கையானவையாகவுள்ளன. எவ்வாறான வழியைக் கடைப்பிடித்தாகிலும் போரை வென்றால் போதும் என்ற ரீதியில் பெருமளவில் போர் தளபாடங்களையும், அழிவு புரியும் ஆயுதங்களையும் வாங்கிக் குவித்துள்ள சிறிலங்கா அரசாங்கம் போருடன் மனித உரிமைகள் பற்றிப் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகும்.

சிறிலங்கா அரசாங்கம் போரில் மனித உரிமைகளைக் கடைப்பிடிப்பது ஒருபுறம் இருக்கட்டும் மனிதநேயத்தையும் மனித நாகரிகத்தையும் முதலில் கடைப்பிடிக்கட்டும். நோயாளர்கள், வயோதிபர்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற பலவீனமானவைகளை போரின் போது தாக்கக் கூடாது என்பது சர்வதேச ரீதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு சாதாரண நடைமுறையாகும். உலக சர்வாதிகாரிகளே கடைப்பிடித்த இந்த அடிப்படை மனிதநேய அம்சத்தை சிறிலங்கா முதலில் மேற்கொள்ளட்டும்.

அண்மையில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்வதாகக் காட்டிக் கொள்ளும் மனித உரிமைகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் சிலவற்றில் உலகில் உள்ள சில நாடுகளும், சில அமைப்புகளும் சிறிலங்கா அரசு இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என நம்புவது போல் தெரிகின்றது. கொழும்பில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதாக அவை காரணம் கற்பிக்க முற்படுவதாகவும் தெரிகின்றது.

ஆனால் கொழும்பில் வாழும் தமிழர்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழ்கின்றார்களா? பயத்துடன் எப்பொழுது என்ன நடக்கும் என்ற அச்சத்துடனேயே வாழ்கிறார்கள். சரி அவர்கள் கொழும்பில் நிம்மதியாக வாழ்வதாகவே வைத்துக் கொள்வோம். அவ்வாறானால், தமிழர்கள் தமது தாயக மண்ணில் சுதந்திரமாக, பாதுகாப்புடன் வாழ வேண்டிய அவசியம் இல்லை என சிறிலங்கா அரசாங்கத்தின் பேச்சைக் கேட்கும் நாடுகள், அமைப்புக்கள் ஏற்றுக்கொள்கின்றனவா?

அவ்வாறு அந்நாடுகள் ஏற்றுக்கொள்வதானால் மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன பற்றி அவை பேசுவதைத் தவிர்த்து, தமது அரசியல் அபிலாசைகள் குறித்து மட்டுமே பேசிக்கொள்ளுதல் நல்லது. அவ்வாறு இல்லாமல், உண்மையிலேயே இனப்படுகொலைகள் நடைபெறுகின்றனவா? இல்லையா என்பதை உறுதி செய்வதானால், அவை வடக்கு, கிழக்கிற்கு நேரில் வந்து நிலைமையை தெரிந்து கொண்டு பேசவேண்டும்.

---

துள்ளார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டுச் சபையின் ஆதரவுடன் இத்திட்டம் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கியம் எனினும், பாடத்திட்டத்தில் இன விருத்தி அறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் குடும்பக்கட்டுப்பாட்டுச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 12 வெற்றிடங்களுக்கு 1500 பேர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் தரம் மூன்று ஊழியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டபோது க.பொ.த. உயர் தரத்தில் விசேட சித்திபெற்றவர்களும், ஜி.ஏ.கியு. மற்றும் க.பொ.த. சாதாரண தரத்தில் விசேட அதிதிறமைச் சித்தி பெற்றவர்களும் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் மூன்றாந்தர ஊழியர்களுக்கான விண்ணப்பத்தில் எட்டாந்தர சித்தியே கோரப்பட்டுள்ளது என்றும் நாட்டில் நிலவும் வேலையின்மை வீத அதிகரிப்பினாலேயே க.பொ.த. உயர்தரம் வரை கற்ற திறமைசாலிகளும் இதற்கு விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆகக் குறைந்தது பன்னிரண்டு பேரை வேலைக்கு அமர்த்தும் திட்டத்தில் ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களை தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை வெகுவிரைவில் நடத்தப்படுமென பல்கலைக் கழக வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. (05)

## வேப்ப மரக் கன்றுகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலிருந்து வேப்ப மரக்கன்றுகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளின் வீதியோரங்களில் நிழலுக்காக இந்த வேம்புகள் நடப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் பலவகை மரங்கள் நிழலுக்காக நடப்பட்ட போதிலும் அங்குள்ள சுவாத்தியத்திற்கு வேப்ப மரங்களே செழித்து வளரக்கூடியதாக உள்ளது. இதனால் வேப்ப மரங்களுக்கு அங்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## பல லட்சம் பெறுமதியான போதைப் பொருள் மீட்பு

### முக்கிய சந்தேக நபரும் கைதாம்

பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியுடைய போதைப் பொருளும் இக் கடத்தலுடன் தொடர்புடைய கோஷ்டியொன்றும் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் காவல் துறை அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனை ஒன்றின் போது போதைப் பொருள் கடத்தலுக்காகப் பயன் படுத்தப்பட்ட நவீன ஆடம்பரமான கார் ஒன்று இலக்ரோனிக் சாதனங்கள் பொருத்தப்பட்ட கிறீஸ் கத்திகள், பெருந்தொகைப் பணம் என்பவற்றுடன் பல இலட்சம் பெறுமதி மிக்க ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று அதிகாலையில் கொழும்பு புளூமன்டால் வீதியில் இருக்கும் தொடர்மாடி வீடொன்றில் காவல்துறை அதிகாரிகள் நடத்திய இத் திடீர் சோதனையின்போது போதைப் பொருள் கடத்தலில் முக்கிய சூத்திரதாரி எனக் கருதப்படும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியத் தகவல் ஒன்றையடுத்து இச் சோதனை நடத்தப்பட்டதாகவும், போதைப் பொருள் தடுப்பு பணியகம், விசேட நடவடிக்கைப் பணியகம் என்பவற்றுடன் இணைந்து இது மேற்கொள்ளப்பட்டதாகவும், காவல்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இச் சோதனை மேற்கொள்ளப்பட்டபோது முக்கிய சந்தேக நபரும் அவரது மனைவியும், ஹெரோயின் போதைப் பொருளை பக்கெட்டுக்களில் அடைத்துக் கொண்டிருந்ததாகவும், அதிகாரிகள் முற்றுகையிட்டதைக் கண்ட முக்கிய சந்தேக நபர் மூன்றாம் மாடியிலிருந்து குதித்து தப்பிக்க முயன்றபோது படுகாயம் அடைந்ததாகவும் மேலும் கூறப்படுகின்றது.

---

விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான, கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், எல்லே விளையாட்டு ஆகியவற்றின் சுற்றுப்போட்டிகள் முடிவடைந்து சம்பியன்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கரபந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் நாகர்கோவில் தெற்கு வெண்மதி விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில், தாழையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டன.

கூடைப்பந்தாட்டப் போட்டியில், தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், எல்லே விளையாட்டுப் போட்டியில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன. (36)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

(சுன்னாகம்)

அன்னை பூபதி நினைவுநாள் உண்ணாவிரதங்களும், கருத்தரங்குகளும் குடாநாடெங்கும் வட்டவைகள் ரீதியாக நடைபெற்று வருகின்றன. இன்று உடுவில் வட்டவைப் பிரதேசத்தில் மயிலணி முருகமூர்த்தி கோயிலடியிலும், 15ந் திகதி கோப்பாய் வட்டவைப் பிரதேசத்தில் புத்தூர் மாவீரர் மாடத்திலும், 16ந் திகதி சிறுப்பிட்டி நீர்வேலிப் பிள்ளையார் ஆலயத்திலும், 18ந் திகதி உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கத்திலும், தெல்லிப்பழை வட்டவைப் பிரதேசத்தில் 16ந் திகதி மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயம் முன்பாகவும் நடைபெறும்.

இறுதிநாள் நிகழ்வுகள் 19ந் திகதி யாழ். இந்து மைதானத்தில் இடம்பெறும். காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரதம் மாலை 5-00 மணிவரை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ளும் மாபெரும் நினைவுநாள் பொதுக் கூட்டமும் இடம்பெறும். (11)

## வீரவணக்கக் கூட்டம்

4ஆம் மாதங்களில் [ஏப்பிரல்] வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்டகோப்பாய் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று திங்கள் இரவு 8.00 மணிக்கு நீர்வேலி தெற்கு திலீபன் சனசமூக நிலைய கொலனியில் நடைபெறும். [90]

---

திருக்கும் கறுப்பின மக்கள் புதிதாக வன்முறையில் ஈடுபடலாம் என்ற அச்சம் இப்போது தலை தூக்கியுள்ளது.

கறுப்பினத்தவரான றொட்னி கிங் பொலிஸாரால் அடித்துக் கொல்லப்பட்டது வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் நான்கு வெள்ளையின பொலிஸாரும் விசாரிக்கப்பட்டு கடந்தஆண்டு ஏப்ரல் 29-ம்திகதி வழங்கப்பட்ட தீர்ப்பு வெள்ளையினப் பொலிஸாருக்கு சார்பாக இருந்த

கிங் என்ற இந்த கறுப்பின சாரதி குடிபோதையில் காரை வேகமாக ஓட்டிச் சென்றதாக வீதியில் லொஸ் ஏன் ஜலிஸ் பொலிஸார் நால்வரினால்வழி மறிக்கப்பட்டு காரிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார். இச் சம்பவத்தை அவ்வீதியில் வந்த மற்றுமொரு கார்ச்சாரதி வீடியோவில் படம்பிடித்து வெளியிட்டதையடுத்து அமெரிக்க கறுப்பினத்தவர்கள் மத்தியில் வெள்ளையரெதிர்ப்பு போக்கு தீவிரமானது தெரிந்ததே.

## காங்கிரஸ் வேட்பாளர் ராவ் தெரிவு செய்வார்

(சென்னை)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பழனி மக்களவை, ராணிப்பேட்டை சட்டப்பேரவை இடைத் தேர்தல்களில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்களை அக்கட்சியின் தலைவர் பி.வி.நரசிம்மராவே தெரிவு செய்வது என நேற்று முன்தினம் நடைபெற்றதமிழக காங்கிரஸ் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்ட வாழப்பாடி ராமமூர்த்தி, இத் தொகுதிகளில் அ.தி.மு.க மற்றும் தி.மு.க தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமது கட்சிக்கு ஆதரவு நல்குமாறும் கேட்டுக் கொண்டார்.

## 8ஆவது சார்க் இந்தியாவில்

(டாக்கா)

அடுத்த 8ஆவது சார்க் மாநாடு இந்தியாவில் நடைபெறும். டாக்காவில் நடைபெறும் சார்க்உச்சிமாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

### இரு முதலமைச்சர்களும்

## வீரப்பனை பிடிக்க புதிய யுக்தி குறித்து பேச்சு

(சென்னை)

சந்தனக் கட்டைக் கடத்தல் காரணமாக வீரப்பனைபிடிக்க புதிய யுக்தியை வகுக்கும் பொருட்டு தமிழக—கர்நாடக முதலமைச்சர்கள் நேற்று கூடி விவாதிக்க விருந்தனர். முதலமைச்சர்கள் ஜெயலலிதாவின் அழைப்பை ஏற்று கர்நாடக முதலமைச்சர் வீரப்பமொய்லி நேற்று சென்னை வந்து சேர்ந்தார். இவருடன் உயர் அதிகாரிகள் குழுவொன்றும் வந்தது.

இதனிடையே வீரப்பனின் கண்ணிவெடியில் சிக்கி பலியான 22 பேரின் குடும்பங்களுக்கும் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

## ஆளுநர் டில்லி விஜயம்

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண்சிங் நேற்று முன்தினம் புதுடில்லி புறப்பட்டு சென்றார். இவரது புதுடில்லி விஜயத்திற்கான காரணம் தெரிவிக்கப்படாவிடினும் அ.தி.மு.க. — காங்கிரஸ் கூட்டு முறிவின் பின்னர் இடைத்தேர்தல் நெருங்கி வரும் இவ்வேளையில் ஆளுநர் புதுடில்லி சென்றுள்ளமை முக்கிய விடயமாக தமிழக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

## படகில் சந்திப்பு

(டாக்கா)

டாக்காவில் தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பான சார்க் அமைப்பின் ஏழாவது உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும், இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் படகுப்பயணத்தின்போது பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

## அ.தி.மு.க தனித்து போட்டி.

(சென்னை)

எதிர்வரும்பழனிமக்களவை, ராணிப்பேட்டை சட்டப்பேரவை இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க தனித்தே போட்டியிடும் என அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்

நேற்று முன்தினம் மதுரையில் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், அ.தி.மு.க பி.ஜே.பியுடன் இப்போது எந்தக் கூட்டும் வைத்திருக்கவில்லை. என்றும் கூறினார்.

ஈழநாதம்

### கண்ணிவெடி உயிரிழப்பிற்கு

# ஜெயலலிதா பொறுப்பேற்று பதவி விலகவேண்டும்

—வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

அ. இ. அ. தி. மு. கவின் ஆட்சிக்காலத்தில்இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் நிகழ்ந்த உயிரிழப்புகளுக்கு தார்மீகப் பொறுப்பேற்று முதல்வர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கோரியுள்ளார்.

வீரப்பன் குழுவினரின் கண்ணிவெடித் தாக்குதல், மற்றும் மகாமகம் சம்பவம் கோவில்பட்டி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உட்பட பல்வேறு சம்பவங்களில் பல அரிய உயிர்கள் இழக்கப்பட்டிருப்பதைசுட்டிக்காட்டியுள்ள காங்கிரஸ் கட்சியினர் இதற்கான பொறுப்பை முதல்வர் ஜெயலலிதாவே தார்மீக ரீதியில் ஏற்கவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் செயற்குழு மற்றும் மாநிலக்குழு கூட்டங்களில் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது என்றும் ஊழல், முறைகேடு, அதிகார துஷ்ப்பிரயோகம் என்பவற்றில் முதலமைச்சர் ஈடுபட்டிருக்கிறார் என்றும் மக்களின் அன்றாட பாவனைப் பொருட்களின் விலை உயர்விற்கு மாநில அரசின் நடவடிக்கைகளே காரணம் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தொழிலாளர் மீது சூடு மூவர் உயிரிழப்பு

(சென்னை)

திருச்சிக்கு அருகே இருக்கும் புகழூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய சுமார் நானூறு தொழிலாளர்களை நோக்கி பொலிசார் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டத்திலான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு, தலா மூன்று லட்சம் ரூபா முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நஷ்டஈடாக வழங்கப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

### மரண அறிவித்தல்கள்

### திருமதி பெரியதம்பி இராசம்மா

சிவகாமி அம்மன் கோயில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த பெரியதம்பி இராசம்மா நேற்று காலமானார். அன்னார் பெரியதம்பியின் அன்பு மனைவியும், சி. தங்கரத்தினம், பெ. கனகசபாபதி (முன்னாள் தலைவர், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம், தவசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக இன்று பிற்பகல் 4 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

### வீரவணக்கக் கூட்டம்

உடுவில்-தெல்லிப்பழை வட்டவைப் பிரதேசங்களின் ஏப்ரல் மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவு வீரவணக்கக் கூட்டம் எதிர்வரும் 21-ம் திகதி உடுவில், தெல்லிப்பழை வட்டவைகளின் பொறுப்பாளர் திரு. ஒப்பிலறிவன் தலைமையில் சுன்னாகம் தெற்கு, கல்லாக்கட்டுவன் பூதரா கோயிலடியில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் உரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (09)

## பயிலுனர் ஆசிரியருக்கு விழா முற்பணம்

பயிலுநர் ஆசிரியர்களாக அண்மையில் நியமனம் செய்யப்பட்டு கடமையாற்றுபவர்களுக்கு இருவர்களின் உறுதிப்பத்திர உத்தரவாதத்துடன் இந்த ஆண்டுக்கான விழா முற்பணமான ரூபா 1500/- சகல கோட்டக் கல்வி அலுவலகங்களினாலும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்சம்பள அடிப்படையில் கடமையாற்றுபவர்களின் மார்கழி 1993 ற்குரிய கொடுப்பனவுகள் மார்கழி 31-ம் திகதிக்கு முன்னரே வழங்கப்பட வேண்டும் என யாழ். பிரதேச கல்வித் திணைக்களம் சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் அறியப்படுறகிது. (17)

## படையினர் குடும்பத்திற்கு இலவச மருத்துவ சிகிச்சை

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பணிபுரியும் படையினரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு அரசு இலவச மருத்துவ வசதியை அளிக்கவுள்ளது.

இது தொடர்பான திட்டத்தை இராணுவத் தளபதி ஆரம்பித்துள்ளார்.

இந்த இலவச சேவைக்கென பல மாவட்டங்களிலும்விசேட வைத்திய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பெருமளவு மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

மணலாறு மற்றும் இடைக்காட்டுப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்களில் வீரச்சாவடைந்த போராளிகள் ஐவரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டன .

கடந்த 9 ஆம் திகதி மணலாறு மினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்தவர்களில் நான்கு மாவீரர்களது புகழுடல்களும் நேற்று முன்தினம் இடைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் நீலவண்ணணின் புகழுடலும் நேற்று மாலை 3.00மணியளவில் மானிப்பாய் இந்துவில் வைக்கப்பட்டபோது பெருந்தொகையான பொது மக்களும் போராளிகளும் திரண்டிருந்து அஞ்சலி செலுத்தினர், மாலை 5.15 மணிவரை சிறுவர்கள், சிறுமிகள். இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் எனப் பலதரப்பட்டோரும் மலர்கள் தூவி கண்ணீர் மல்கத் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

மக்கள்அஞ்சலியைத் தொடர்ந்து வலிகாமம் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் சத்தியா தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இதில் யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு ஜவான், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டவெளியீட்டு பிரிவுப் பொறுப்பாளர் திரு கலையரசன் விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் பங்கயற்செல்வி ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இறுதியாக மாவீரர்களின் புகழுடல்கள் தாங்கிய பேழைகள் வைக்கப்பட்ட வாகனம் இராணுவ அணிவகுப்புடன் அங்கிருந்து ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் அங்கு விதைக்கப்பட்டன.

### அன்னை

உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இந்த உண்ணா விரத முடிவில் இடம்பெற்ற கருத்தரங்கில் விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் பாதர், ஆண்டான்குள அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கி. பரணிரூபன். பிரதேசப் பொறுப்பாளர் ரவீந்தர், கதிரவெளி பகுதிப் பொறுப்பாளர் திலகர் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும், கதிரவெளி, அம்மந்தனவெளி பாற்சேனை கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். அத்துடன் மேற்படி இடங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடாத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் கொத்தியாவலை பாடசாலையில் அன்னைபூபதி நினைவாக கருத்தரங்கு கடந்த வியாழனன்று நடாத்தப்பட்டது. மாவடி, முன்மாரி பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு விமல்ராஜ் தலைமையில் நடைபெற்றஇக்கருத்தரங்கில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழன்பன் உரைநிகழ்த்தினார். பலநூற்றுக்கணக்கான பொது மக்களும் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

### குடாக்

மக்களிடையே பதற்றத்தை காணமுடிவதுடன்மீனவர்களும் தொழிலின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது (90)

# கறுப்பினத்தலைவர் கொலை தெ.ஆபிரிக்காவில் வன்முறை

தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர்களில் ஒருவரான கிறிஸ் ஆனின் துப்பாக்கி நபர் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அங்கு கறுப்பினத்தவர்கள் வன்முறைகளில் இறங்கியுள்ளனர்.

சிறுபான்மை வெள்ளையராட்சியிலிருந்து பல்வேறு இன ஆட்சி முறையை கொண்டுவர சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ் வேளையில் இவரின் மர்மமான முறையிலான படுகொலை பேரிழப்பு என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜோகனஸ்பேர்க் அருகில் இவர் தனது வீட்டுக்கு முன் வைத்து துப்பாக்கி நபர் ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலையாளியின் அடையாளத்தை அயலவர்கள் விபரித்ததையடுத்து காரில் தப்பிச்சென்று கொண்டிருந்த இந்த வெள்ளையினக்கொலையாளியை தென்னாபிரிக்க பொலிஸார் சில நிமிடங்களில் கைது செய்தனர். இவரிடமிருந்து இரு கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டது. கைதான இவர் போலந்து நாட்டுக்காரர் என சில செய்திகள் தெரிவிக்கின்றன.

### காணப்பட்டது

வல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலில் பலியான ஒருவரது சடலம் நேற்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது. மேற்படி பகுதியில் பலியானவர் மரக்கறி வியாபாரியான குப்பிளானைச் சேர்ந்த சின்னப்பு சண்முகம் (வயது 56) ஆவார்

### உதைபந்தாட்டம்

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு கழகம் நடத்தும் உதை பந்தாட்டப் போட்டி

## அனாதைச் சிறுவர் இல்லம் ஆரம்பம்

இன்றைய யுத்த சூழ்நிலையால் பெற்றோரை இழந்தவர்களாகவும் - அல்லது தந்தையை, பாதுகாவலர்களை இழந்தவர்களாகவும் உள்ள 12-வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் சிறுவர்களை பராமரிக்கும் இல்லம் ஒன்றை

யாழ்-மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம்

ஆரம்பிக்க உள்ளது. அனாதைச்சிறுவர்களைச் சேர்ப்பிக்க விரும்புவோர் அந்தந்தப்பகுதி பங்குத்தந்தையர்களூடாக தொடர்புகொள்ளவும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## பெரியதம்பி இராசம்மா

சிவகாமி அம்மன் கோயில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த பெரியதம்பி இராசம்மா நேற்று காலமானார். அன்னார் பெரியதம்பியின் அன்பு மனைவியும், சி. தங்கரத்தினம், பெ. கனகசபாபதி (முன்னாள் தலைவர், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம், தவசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக இன்று பிற்பகல் 4 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெ. கனகசபாபதி
[மகன்]

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு.

(4674)

---

## சண்முகநாதர் வேலுப்பிள்ளை

மணத்தறை வீதியை சேர்ந்த சுருட்டு முதலாளியான சண்முகநாதர் வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கே. ரீ. சம்பந்தர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-04-93 இன்று முற்பகல் 9 மணியளவில் அம்மன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
4673 மு. விஸ்வலிங்கம்

---

## திருமதி
## கமலாவதி ஜெயசிங்கம்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த திருமதி கமலாவதி ஜெயசிங்கம் கடந்த 10 ஆம் திகதி இரவு கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற ஜெயசிங்கத்தின் (ஓய்வு பெற்ற கொழும்பு மாநகரசபை விளையாட்டுத்துறை அதிகாரி) அன்பு மனைவியும், ஜெயக்குமார் (Scan Graphics, Colombo), பிறேம்குமார் (ஜேர்மனி), சந்திரலேகா (U K.), அசோக்குமார் (U. N. H. C R Jaffna), சந்திரஜோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்தானலட்சுமி, பிரேமளா (ஜேர்மனி), செல்வ குமார் (U, K.), கீத்தா (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ இறுதி ஆண்டு மாணவி 1992) ஆகியோரின் அன்பு மாமியாரும, சதீஸ்குமார், ஜனனி, பிரேமி [ஜேர்மனி], சாலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இல. 4, நாயன்மார்வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம் [சி-6404]

தகவல்:
ஜெ. அ. அசோக்குமார்
[மகன்]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

# தெ.ஆபிரிக்காவில் வன்முறை

தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர்களில் ஒருவரான கிறிஸ் ஆனின் துப்பாக்கி நபர் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அங்கு கறுப்பினத்தவர்கள் வன்முறைகளில் இறங்கியுள்ளனர்.

சிறுபான்மை வெள்ளையராட்சியிலிருந்து பல்வேறு இன ஆட்சி முறையை கொண்டுவர சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் இவரின் மர்மமான முறையிலான படுகொலை பேரிழப்பு என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜோகனஸ்பேர்க் அருகில் இவர் தனது வீட்டுக்கு முன் வைத்து துப்பாக்கி நபர் ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலையாளியின் அடையாளத்தை அயலவர்கள் விபரித்ததையடுத்து காரில் தப்பிச்சென்று கொண்டிருந்த இந்த வெள்ளையினக் கொலையாளியை தென்னாபிரிக்க பொலிஸார் சில நிமிடங்களில் கைது செய்தனர் இவரிடமிருந்து இரு கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டது. கைதான இவர் போலந்து நாட்டுக்காரர் என சில செய்திகள் தெரிவிக்கின்றன.

---

காணப்பட்டது

வல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலில் பலியான ஒருவரது சடலம் நேற்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது. மேற்படி பகுதியில் பலியானவர் மரக்கறி வியாபாரியான குப்பிளானைச் சேர்ந்த சின்னப்பு சண்முகம் (வயது 56) ஆவார்

---

## செஞ். அதிகாரி மரணம் இ. த. ஆ. சங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் புக்காரா விமானத்தின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உபதலைவர் க. புவனேந்திரனின் மரணம் குறித்து இ. த. ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் பதில் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரும், ஆசிரியருமான புவனேந்திரன் மனிதநேயப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் அவர் மீது புக்காரா விமானம்மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை குறித்தும் மேற்படி சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

---

மட்டு மாவட்டத்தில்

## அன்னை பூபதி நினைவு அறிவுக் களஞ்சிய போட்டி

(மட்டக்களப்பு)

அன்னை பூபதி 5-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு ஆண்டாங்குள பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்பட்ட அறிவுக் களஞ்சியப் போட்டி நேற்று முன்தினம் காலை பத்து முப்பது மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் பாதர் மற்றும் ஆண்டாங்குளப் பிரதேசப் பொறுப்பாளர் கி. பரணிரூபன் ஆகியோர் நினைவு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

---

விசேட வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

நவாலி மகாவித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தினரின் அனுசரணையில் ஆண்டு 5 முதல் ஆண்டு 11வரையிலான மாணவர்களுக்கு பல்கலைக் கழக மாணவர்களின் உதவியுடன் விசேட கல்வி வழங்கப்பட்டு வருவதாக நவாலி மகாவித்தியாலய உபஅதிபர் தெரிவித்தார்.

இவ்வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை 3.00 மணி முதல் 6.00 மணிவரை நடைபெறுகின்றன எனவும் இதில் 300 மாணவர்கள் கல்வி பயிலுவதாகவும்அவர் தெரிவித்தார்

(05)

---

கல்வியியல்

களில் மனையியல் டிப்புளோமா பெற்றவர்களுக்கு அடிப்படைச்சம்பளமாக 2150 ரூபா வழங்கப்படுகிறது. இது நியாயமற்றது என்று ஆசிரியர்கள் தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

---

கிளாலி

தெரியவரவில்லை.

பலாலியில் ஏனைய கடல் பரப்பிலும், இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்கள் மட்டுமே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

---

பதில்

அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

## உதைபந்தாட்டம்

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு கழகம் நடத்தும் உதை பந்தாட்டப் போட்டியில் இன்று திங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு வட்டு விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஞானகலா வி. கழகமும், பிற்பகல் 4 மணிக்கு சென்மேரிஸ்வி க.வை எதிர்த்து குருநகர் சென்றொக்கும் மோதுகின்றன.

---

மாபெரும்

புனர்வாழ்வு பொறுப்பாளர் மாலினி, திருமலை தொடர்பகத்தை சேர்ந்த வாகீசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

திரு.கரிகாலன் இங்கு மேலும் கூகையில், 5000க்கு மேற்பட்ட மாவீரர்கள் தம் உயிரைத் தற்கொடையாக்கி இப்போராட்டத்தை வளர்த்துள்ளனர். ஆனால் போராட்டத்திற்கு வெளியே பார்வையாளர்களாக இருந்து 50000 பேருக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் மடிந்துள்ளனர். இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளோர் தங்கள் ஆயுதங்களால் தங்களினதும், மக்களினதும் உயிரைப் பாதுகாத்துக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

---

துப்பாக்கி

கத்தினைமேற் கொண்டுள்ளனர். இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12-00மணியளவில் பொன்னையா செல்லையா (33 வயது)அளவெட்டி வடக்கு) என்பவர் தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையே மேற்படி பகுதியில் இருந்து இராணுவத்தினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் படுகாயமடைந்துள்ளார்.

இவர் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

---

வாற்றினார்கள். அத்துடன் மேற்படி இடங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடாத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் கொத்தியாவலை பாடசாலையில் அன்னைபூபதி

---

நீடாக்

மக்களிடையே பதற்றத்தை காண முடிவதுடன்மீனவர்களும் தொழிலின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது (90)

---

## அனாதைச் சிறுவர் இல்லம் ஆரம்பம்

இன்றைய யுத்த சூழ்நிலையால் பெற்றோரை இழந்தவர்களாகவும் - அல்லது தந்தையை, பாதுகாவலர்களை இழந்தவர்களாகவும் உள்ள 12-வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் சிறுவர்களை பராமரிக்கும் இல்லம் ஒன்றை

யாழ்-மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம்

ஆரம்பிக்க உள்ளது. அனாதைச்சிறுவர்களைச் சேர்ப்பிக்க விரும்புவோர் அந்தந்தப்பகுதி பங்குத்தந்தையர்களூடாக தொடர்புகொள்ளவும்.

அருட்திரு. எம். ஈ. பயஸ்
இயக்குனர்,
மனித முன்னேற்ற நடுநிலையம்.

தியோகு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6403)

---

## Application for the post of Project - Co - Ordinator

Applications are invited from suitable candidats for the post of project Co-Ordinator.

1. Age above 45 years.
2. Experience in Preparation, Implementation and Monitoring of Community Development, Rehabilitation Projects.
3. Salary not Less Than Rs, 4000/-
4. Period of Employment One Year.
5. Closing Date : 21-04-93.

Applications to be Forwarded to

The Chairman,
F. R. G. Project Implementation Organizations,
C/o, N. G O Council,
100, Rasavinthoddam,
Jaffna. (சி-6405)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 11-4-93

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 9028

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3667, 24-5041, 26-1989, 24-5818, 27-4301.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-0576, 24-0207, 24-3844, 24-9938, 24-7173, 27-7081, 26-4376, 41-9663, 26-5962, 26-3605, 27-1542, 41-9166, 24-8391.